தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயம், கடலூர்

M.C.O.P. No.3466 / 2013

எதிர்மனுதாரர் தரப்பு **1-**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வி.வெங்கடேஸ்வரன் | வயது | : 59 |
| தந்தை/கணவர் பெயர் | : S.தேவராஜன் | தொழில் | : S.S.I |
| கிராமம் | : திருப்பாப்புலியூர் | ஜாதி | : ------ |
| தாலுக்கா | : கடலூர் | சமயம் | : ------ |
| மாவட்டம் | : கடலூர் | மொபைல் | : 9498154523 |

சட்டம் 49/1969ன் விதிமுறைகளின்படி **27.11.2025** நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய நீதிபதி**,** கடலூர், அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை**:**

நான் தற்போது கடலூர் புதுநகர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து இவ்வழக்கு சம்மந்தமாக குற்ற எண்.283/2011 வழக்கின் குற்றப்பத்திரிகை மற்றும் இதர ஆவணங்கள் கொண்டுவருமாறு அழைப்பாணை வந்ததன் பேரில் உதவி ஆய்வாளரின் வாய்மொழி உத்தரவின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி குற்ற எண் தொடர்பான சி.டி. பைல் கொண்டு வந்துள்ளேன். நான் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த விபத்தில் 2 ஆட்டோக்கள் மோதி ஏற்பட்டதாக ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது. TN-31-AC-2029 என்ற ஆட்டோ மீது TN-31 E-4882 என்ற ஆட்டோ மோதி விபத்து ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் சாட்சிகளை விசாரித்தும் சம்பவ இடத்தை பார்வையிட்டும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்றப்பத்திரிக்கை TN-31-E-4882 என்ற ஆட்டோ மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆட்டோ ஓட்டுநர் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றும் காப்பீடு தாக்கல் செய்யவில்லை என்றும் அபராதம் செலுத்தியுள்ளார். TN-31-E-4882 ஆட்டோ ஓட்டுநரின் அஜாக்கிரதை, கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக

ஆவணங்கள் மூலம் தெரிகிறது என்றால் சரிதான். குற்ற எண்.283/2011 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை உண்மை நகல் எ**.**ம**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்பட்டது. எதிரி விஜயகுமாருக்கு காவல் துறை மூலம் கொடுக்கப்பட்ட அறிவிப்பு நகல் எ**.**ம**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்பட்டது. TN-31-E-4882 ஆட்டோவின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணை **:**

நான் இந்த வழக்கை புலன் விசாரணை செய்யவில்லை. எந்தெந்த சாட்சிகளை விசாரித்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. இரண்டு ஆட்டோக்கள் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு ஆட்டோக்களில் பயணம் செய்தவர்களுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது என்றால் TN-31- AC-2029 வாகனத்தில் சென்றவர்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளது. இரண்டு வாகனங்களும் மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பப்பட்டது. TN-31-E-4882 ஆட்டோவிற்கு மோட்டார் வாகன ஆய்வறிக்கை உள்ளது. மேற்படி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் இன்சூரன்ஸ் விவரம் கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறுதி அறிக்கை சம்மந்தப்பட்ட குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. வழக்கில் என்ன தீர்ப்பு வழங்கப்பட்டது என்று தெரியாது.

மறு விசாரணை - இல்லை.